# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI

# O.S. No. 296/2023

Deposition of PW.1

Name of the Witness: திரு.திருவேந்திரன்

Date : 20.07.2026

**குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் BE., computer science படித்துள்ளேன். நான் பிரமண வாக்குமூலத்தில் உள்ள முகவரியில் எத்தனை வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் 10 வருடங்களாக வசித்து வருகிறேன். நான் போச்சம்பள்ளி சிப்காட் கம்பெனியில் செக்கியூரிட்டியாக பணிபுரிகிறேன். வாடகை ஒப்பந்தம் எந்த தேதிதியில் போடப்பட்டது என்றால் 15.07.2019 ல் போடப்பட்டது. எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அந்த ஒப்பதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே எத்தனை ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் மேற்கூரிய 15.07.2019 தேதிய ஒரே ஒப்பந்தம் தான் ஏற்படுத்தப்பட்டது. எனக்கு பிரதிவாதிகளை எப்படி தெரியும் என்றால் பள்ளி வாடகைக்கு விடுவதாக புரோக்கர் மூலம் கேள்விப்பட்டு அதன் மூலம் தெரிந்துக்கொண்டேன். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஜெ. அருள்மொழி யார் என்றால் அவர் நிதிவுதவி செய்தவர் ஆவார். அவருக்கும் ஒப்பந்தத்திற்கும் சம்மந்தம் இல்லை. அவர்

கையெழுத்தும் இடவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் அருள்மொழி என்னுடன் சேர்ந்து கையெழுத்து செய்ததாக கூறிவிட்டு தற்போது அதனை மாற்றி அவர் கையெழுத்து இடவில்லை என்று சாட்சியம் அளித்துள்ள நிலையில், எது உண்மை என்றால் வாடகை ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்து இட்டது தான் உண்மையாகும்.

**(பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )**

Sd/Tmt.K.R.Jothi, B.A.,B.L.,
Additional District Judge,
Dharmapuri.